14th February 1959]

SRI A. GOVINDASAMY : இந்த ராஜ்யம் பூராவும் படித்து வேலையில்லாமல் இருப்பவர்கள் 56,397 பேர் என்று புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அவர்களுக்கு வேலை கொடுக்க துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும் புள்ளி விவரம் சரியாக இருந்தால், வேலையில்லாதவர்களில் எம்ப்லாய்மெண்ட் எக்ஸ்ச்சேன்ஜில் ரிஜிஸ்டர் செய்துக் கொண்டவர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டுவருகின்றன.

SRI A. GOVINDASAMY : எம்.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்கள் பலருக்கு வேலை கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறது. சென்னையிலிருந்து பட்டம் பெற்ற எம்.எஸ்.ஸீகளுக்கு வேலை கொடுக்கப்படுகிறது ஆனால் அண்ணாமலை யூனிவர்சிடியில் பாஸ் பண்ணியவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. அப்படியென்றால் அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் வேலை கொடுக்கும் ஸ்தாபனத்தில் என்ன படிப்பு படித்திருக்கிறார்கள் என்பதை தவிர அவர்கள் ஊரைப்பற்றி கேட்பதில்லை.

SRI M. K. SOMASUNDARAM : 3-வது பாரத்திலிருந்து 5-வது பாரம் வரையில் உள்ள வகுப்புகள் வரையில் படித்திருக்கும் மாணவர்களை சேர்த்து. அவர்களுக்கு ஏதாவது தொழில் கற்றுக்கொடுக்க அரசாங்கம் முன் வருமா ? 9-30 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : நமது ராஜ்யத்தில் இப்போது 12 இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் ஸ்கூல்கள் நடந்து வருகின்றன. அவைகளில், 3-வது பாரத்திற்கு மேல் படித்தவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை நன்றாக கிடைத்து வருகிறது. இந்தப் பயிற்சி இல்லாதவர்களுக்குத் தான் வேலை கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது.

Quarters for Government Press workers

* 332 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to form a colony for Government Press Workers of Madras;

(*b*) if so, the amount provided therefor; and

(*c*) at what stage its implementation stands?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Yes, Sir.

The Government have sanctioned a scheme for the construction of 300 quarters to the workers of the Government Press, Madras, at a total estimated cost of about Rs. 20 lakhs, spread over a period of three years.

(*c*) The foundation stone has been laid and the work taken on hand by the Public Works Department.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know the number of workers that will be accommodated in these quarters.

THE HON. SRI V. RAMAIAH : The building scheme is for 300 men.